# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 15–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**<u>I.A. No. 07 of 2024 in O.S. No. 41 of 2014</u>**
**<u>(CNR No. TNSA13-000259-2014)</u>**

1. M. அன்புக்கரசு (இறந்தவர்)
2. விஜயலட்சுமி
3. தட்சிணாமூர்த்தி
4. கவிதா .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. அழகம்மாள்
2. லட்சுமி
3. சாரல் (எ) பார்வதி

1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின்
பொது அதிகாரம் பெற்றவர் .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 03.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, 1–ம் மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 2 முதல் 4 மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில்

*.. 2 ...*

வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்களும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சின்னதுரை அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவுரை**

மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை தாவா சொத்தானது அவர்களது அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க பனைமடல் கிராம நிர்வாக அலுவலரை வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்களுடன் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி தாவாவில் மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா சொத்து அவர்களுடைய அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க பனைமடல் கிராம நிர்வாக அலுவலரை வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்களுடன் சாட்சியாக விசாரிக்க வேண்டியது அவசியமாகும்.

.. 3 ...

ஏனெனில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் உரிமையும், அனுபவமும் உள்ளதுபோல வாதாடி வருகிறார்கள். பனைமடல் கிராம நிர்வாக அலுவலர் அவர்களை விசாரித்தால்தான் தாவாவை நிரூபிக்க ஏதுவாக அமையும் என்பதால் பனைமடல் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் தாவா சொத்தை நேரில் பார்வையிட்டு நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டி மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **3–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2, எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர். மேலும், மனுதாரர்களின் அனுபவத்தை நிரூபிக்க வருவாய்துறை ஆவணங்களை சமர்பிக்குமாறு கிராம நிர்வாக அலுவலரை அழைக்க முடியாது. மாறாக அனுபவத்தில் உள்ள சொத்திற்கான சான்றிட்ட நகல்களை மனுதாரர்கள் சமர்பிப்பதன் மூலமே நிரூபிக்க முடியும். சொத்துரிமை மற்றும் அனுபவம் பற்றி பேசுவதற்கு கிராம நிர்வாக அலுவலர் தகுதியற்ற அதிகாரி ஆவார். மேலும் சட்டப்பூர்வ நடைமுறைகளை பின்பற்றி சொத்துரிமை மற்றும் அனுபவம் பற்றி பேசுவதற்கு வட்டாட்சியருக்கு மட்டுமே அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர்கள் / வாதிகள் இந்த மனுவை, தாவா சொத்தானது அவர்களது அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க பனைமடல் கிராம நிர்வாக அலுவலரை வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்களுடன் சாட்சியாக விசாரிக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

2) மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் வாதிகளின் அனுபவத்தை நிரூபிக்க வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தை நிரூபணம் செய்ய மனுதாரர்கள் / வாதிகளுக்கு வாய்ப்பளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

7. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 15–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/– D. ஜான்சிராணி**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

.. 5 ...

| | |
|---|---|
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

**ஒம்/– D. ஜான்சிராணி**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 7/2024**

**---------------**

**அ.வ. எண் 41/2014**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 15.07.2025